<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP.No. 61/2023</u>

PW : 2

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 23 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வெங்கட்ராமன் | த / பெ. | : | திரு. ஞானபிரகாசம் |
| கிராமம் | : | திருவாதிரைமங்கலம் | தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | ஓட்டுநர் | வயது | : | 33 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் தரப்பினர் இல்லை. நான் மனுதாரர் தரப்பில் சாட்சி 2 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. என் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் திடீரென லாரியை நிறுத்த வேண்டிய வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலையில் லாரியை நிறுத்தும் போது முறையான செய்கை, ஒலி எழுப்பி நிறுத்த வேண்டும் என்றால் சரிதான். இந்த விபத்தின் போது லாரி முறையான சமச்சையின்றி சாலை விதிகளை கடைபிடிக்காமல் நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

**<u>5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல பார்த்தேன். எனது சொந்த ஊர் திருவாரூர். இந்த விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. நான் எனது முதல் விசாரணையில் லாரி திடீரென Break போட்டதன் காரணமாக லாரியின் பின்னால் வந்த அரசு பேருந்து லாரியில் மோதி விபத்து ஏற்பட்டதாக எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியிருப்பது உண்மைக்கு முரணானது என்றால் சரியல்ல. இந்த

விபத்திற்கு பேருந்தின் அதிவேகமும், அஜாக்கிரதையும் காரணம் என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. இறந்த மணிகண்டனின் தகப்பானர் எனக்கு பழக்கமானவர். நான் சம்பவ இடத்தில் இல்லாமலும், கண்ணில் பார்க்காமலும் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.06.23 18:12:24 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்